<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

**OS. No**. 166/2018 **Date**: 01.08.2023

**PW** -1 - தங்கராசு

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதியின் சொந்த ஊர் கொங்கணாபுரம். ஆனால் பூலாம்பட்டியில் வசிக்கிறார். பிரதிவாதி சீலை மற்றும் கவரிங் செயின் வியாபாரம் செய்கிறார். பிரதிவாதி **BSNL** எடப்பாடியில் பணிபுரிவதாக நான் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி சீலை மற்றும் கவரிங் செயின் வியாபாரம் செய்வதாக நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவர் எனக்கு உறவினரோ நண்பரோ இல்லை. வா.சா.ஆ1 தேதிக்கு 6 மாதம் முன்பே பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டார். வியாபாரம் மற்றும் குடும்ப செலவிற்காக கடன் கேட்டார். பிரதிவாதி அரசு ஊழியர் என்பதால் குடும்ப மற்றும் வியாபார செலவுக்கு கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் விவசாயம் செய்கிறேன். எனக்கு 4 ஏக்கர் நிலம் உள்ளது. அதற்காக ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். பிரதிவாதி என்னிடம் ரூ.3,50,000/- கடன் வாங்கியதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. மேற்படி ரூ.3,50,000/- கடன் கொடுப்பதற்கான வசதியோ, வருமானமோ எனக்கு இல்லை என்றால் சரியல்ல. நான் தாவா கடனை என் வீட்டில் வைத்து கொடுத்தேன். சாட்சிகளை பிரதிவாதி தான் அழைத்து வந்தார். வா.சா.ஆ1 எழுதியவர் பெயர் பாபு ஜெனார்த்தன். சாட்சி கையெழுத்து செய்தவர் பெயர் முத்து. எதிர்வழக்குரை விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றாலும், வா.சா.ஆ1யை எழுதி கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ1 மோசடியானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 ல் உள்ள கையெழுத்து நான் தான் மெய்பிக்க வேண்டும் என்றால் சரிதான். எதிர் வழக்குரை விவரங்களை எனக்கு தெரியாது என்று பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி ஆங்கிலத்தில் கையெழுத்து செய்தார். மொத்தம் 2 கையெழுத்து செய்தார். இடது கை பெருவிரலால் 2 ரேகைகள் வைத்தார். தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- தங்கராசு

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.